பொய்க்கூற்றம் சாட்டி மரண தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையிடப்பட்டிருந்த பூரட்சிகரக் கலைஞரான தோழர் ஜிதனே் மராண்டி, மரணத்தின் பிடியிலிருந்தும் விடுதலை பெற்றுள்ளார்.

தோழர் ஜிதனே் மராண்டி ஜார்கந்த் மாநிலத்தின் நாட்டுப்புற பாடல்களைப் பாடும் மக்கள் கலைஞராவார். பழங்குடி இனத்தைச் சேர்ந்த அவர், அரசியல் கதைகள் விடுதலைக்கான கமிட்டியின் செயலர்களில் ஒருவர். அவரது பாடல்கள் கார்ப்பரேட் கொள்ளையையும் ஜார்கந்த் அரசின் கட்டாய நிலப் பறிப்பையும் எதிர்த்தும் முழங்குகின்றன. இதனாலயேே, அவரது குரல்வளையைத் தாக்குக் கயிறால் இறுக்கி அழிக்கத் தூண்டித்தது, ஜார்கந்த் மாநில அரசு.

கடந்த 2007ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் நாள் ஜார்கந்தின் கிரிதி மாவட்டத்திலுள்ள சில்காரி கிராமத்தில், அம்மாநில மூன்னாள் மூதல்வரான பாபூலால் மராண்டியின் மகனாகிய அனூப் மராண்டி உள்ளிட்டு 19 பரே் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலையை மாவோயிஸ்டுகள் நடத்தியதாக ஆட்சியாளர்கள் குறிவருகின்றனர். ஜிதனே் மராண்டி என்பவர் தலையிலான 10 பரே் கொண்ட கூழு இப்படுகொலையை நடத்தியதாகக் கூற்றம் சாட்டி, இந்த 10 பரேின் மூகவரியோ, பறெ்றோர் பயெரோ இல்லாமல் மூதல் தகவல் அறிக்கையை போலீ சு பதிவு செய்தது.

மறுநாள் அக்.29 அன்று ராஞ்சியசை் சரே்ந்த "பிரபாத்கபர்" என்ற நாளடேு, நாட்டுப்புறக் கலைஞரும் அரசியல் கதைகள் விடுதலை இயக்கத்தசை் சரே்ந்தவருமான ஜிதனே் மராண்டி ஓரு மாவோயிஸ்டு தீ விரவாதியாவார் என்று கதை கட்டி, அவரது பூகபை்படத்துடன் செயை்தி வளெியிட்டது. மனித உரிமையாளர்களும் பூரட்சிகர ஜனநாயக சக்திகளும் இப்பொய்ச் செயை்திக்கு எதிராகக் கண்டனம் தரிவித்ததும், மறுநாள் அக்.30 அன்று தவறுக்கு வருத்தம் தரிவித்து, பூகபை்படத்திலுள்ள ஜிதனே் மராண்டி வறேு என்றும், தாக்குதல் நடத்திய மாவோயிஸ்டு ஜிதனே் மராண்டி வறேு என்றும் இந்த நாளடேு மறுப்பூச் செயை்தியை வளெியிட்டது.

இந்நிலையில், கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகப் போராடிவரும் தோழர் ஜிதனே மராண்டியையும் புரட்சிகர ஜனநாயக சக்திகளையும் ஒடுக்கும் நோக்கத்துடன் இந்த விவகாரத்தை போலீ சு பயன்படுத்திக் கொண்டது.

ஜார்கந்த் மாநிலத்தில் கார்ப்பரேட் முதலாளிகளின் கட்டாய நிலப்பறிப்புக்கு எதிராக கடந்த 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் தேதி நடந்த விவசாயிகள் போராட்டப் பேரணி பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஜிதனே மராண்டி மீ து கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாகப் பொய்க்குற்றம் சாட்டிய போலீ சு, அவரைக் கைது சய்து சிறையிலடைத்தது.

2008 ஏப்ரல் 12ஆம் தேதியன்று அவர் பிணையில் வெளிவரும்போது, 2007ஆம் ஆண்டில் சில்காரியில் நடந்த படுகொலையைதை தலைமையேற்று நடத்திய மாவோயிஸ்டு பயங்கரவாதி இவர்தான் என்று மீ ண்டும் பொய்க்குற்றம் சாட்டிக் கைது சய்தது, போலீ சு. அவரோடு பழங்குடியின ஏழை விவசாயிகளான மனோஜ் ராஜ்வார், சத்திரபதி மண்டல், அனில்ராம் ஆகியோரும் இக்கொலையில் ஈடுபட்டதாகக் கைது சய்யப்பட்டனர். கடந்த ஜூன் 2009 இல் ஜார்கந்த் மாநிலக் கீ ழமை நீ திமன்றம் தோழர் ஜிதனே மராண்டி உள்ளிட்ட நால்வருக்கும் மரண தண்டனை விதித்தது.

ஜிதனே மராண்டி என்ற பெயரில் ஒரு மாவோயிஸ்டு புரட்சியாளர் தலைமறைவாக இயங்கி வருகிறாராம். அதே பெயரில் உள்ள நாட்டுப்புறப் பாடகரான ஜிதனே மராண்டியைக் கைது சய்து, இவர்தான் அந்த மாவோயிஸ்டு தீ விரவாதி என்று கணக்கு காட்டியது ஜார்கந்த் போலீ சு.

தோழர் ஜிதனே மராண்டி மீ து பொய்க்குற்றம் சாட்டி மரணதண்டனை விதிக்கப்பட்டதை பல்வறேு மனித உரிமை அமைப்புகளும் எதிர்த்தது ஆர்ப்பாட்டங்களை நடத்தின. ஜார்கந்த் விகாஸ் மோர்ச்சா என்ற அமைப்பின் தூணைத் தலைவரும், முன்னாள் அமைச்சரும்மான டாக்டர் சவா அகமது, போலீ சார் குற்றவாளியைக் கைது சய்து விட்டதாகக் கணக்குக் காட்டுவதற்காக நாட்டுப்புறக் கலைஞரான ஜிதனே மராண்டியைக் கைது சய்து வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார்.

தோழர் ஜிதனே மராண்டி மீ து பொய்க்குற்றம் சாட்டி ஆட்சியாளர்கள் மரண தண்டனை விதிக்கக் காரணம் என்ன? எங்கலெல்லாம் கார்ப்பரேட் கொள்ளையும் நிலப்பறிப்பும் தொடர்கிறதோ, அங்கலெல்லாம் தோழர் ஜிதனே மராண்டி தனது கூழுவினருடன் கலநிகழ்ச்சிகள் நடத்தி மக்களுக்கும் போராட்ட உணர்வூட்டினார். மக்களின் போராட்டத்தை எதிரொலிக்கும் அவரது பாடல் ஒலிப்பழேகைள் ஜார்கந்த் மட்டுமின்றி,

அண்டை மாநிலங்களிலும் உழைக்கும் மக்களிடம் பிரபலமடைந்துள்ளன. அவர் ஜார்கந்த் மக்களின் போராட்ட அடையாளமாகத் திகழ்ந்தார். இதுதான் அரசின் வன்மத்துக்குக் காரணம்.

தோழர் ஜிதனே் மராண்டி மீது கொலைக்குற்ற வழக்கு கடந்த ஈராண்டுகளாக நடந்துவந்த நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அவர்கள் குற்றம் செய்தார்கள் என்று நிரூபிக்க வலுவான ஆதாரங்கள் இல்லை என்று கூறி, ஜிதனே் மராண்டி உள்ளிட்ட நால்வரும் நிரபராதிகள் என்று அறிவித்தது, கடந்த 2011 டிசம்பர் 15ஆம் தேதியன்று ஜார்கந்த் உயர் நீதிமன்றம் அனைவரையும் விடுதலை செய்துள்ளது. பூரட் சிகர இயக்கத்தின் மீது அடக்குமுறையை ஏவி மூடமாக்கும் நோக்கத்துடனும், பழிவாங்கும் வன்மத்துடனும் போலீ சார் அவசர கோலத்தில் அடிமூட்டாள்தனமாக சோடித்த பொய் வழக்கு பூஸ்வாணமாகிப் போனது. அதுசேமயம், ஜிதனே் மராண்டி மற்றும் பழங்குடியின விவசாயிகள் மீது பொய்க்குற்றம் சாட்டப்பட்ட இன்னும் பல்வறே வழக்குகள் போலீ சாரால் சோடிக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து இப்போராளிகளை விடுவிக்கவோ, பொய் வழக்கு சோடித்த போலீ சு அதிகாரிகளைக் கதை செய்து தண்டிக்கவோ நீதிமன்றம் முன்வரவில்லை.

இது, ஜார்கந்தில் நடந்த ஏதோ விதிவிலக்கான விவகாரம் என்று ஒதுக்கிவிட முடியுமா? காஷ்மீர் மனிதஉரிமை குறித்த மக்கள் நீதிமன்றம் என்ற அமைப்பின் கூட்டத்தில் பேசவந்த அமரிக்காவசை் சரேந்த பரோசிரியர் ரிச்சர்ட் ஷாப்ரியரோ, காணாமல் போனவர்கள் பற்றிய ஆசியக் கூட்டமைப்பின் சார்பில் காஷ்மீர் ுக்கு வந்த மே அகினோ, காஷ்மீர் ுக்குச் சென்ற மனித உரிமை செயல் வீரரான கௌதம் நாவ்லகா என அனைரூமே டெல்லி, சிறீ நகர் விமான நிலையங்களிலிருந்து திரூப்பி அனூப்பப்பட்டனர். இந்தியாவுக்கு அந்நிய கார்ப்பரேட் நிறுவனங்களின் அதிபர்களும் இயக்குனர்களும் தாராளமாக வந்து போகலாம். ஆனால், காஷ்மீரின் மனித உரிமை பற்றிப் பேசுவதற்கு உள்நாட்டினரோ, வளிநாட்டினரோ எவரும் வரக்கூடாது என்பதுதான் இந்திய அரசின் எழுதப்படாத விதியாகிவிட்டது.

சட்டிஸ்கரின் தண்டவோடாவசை் சரேந்த பழங்குடியின இளைஞரான லிங்கராம் கோடோபி, மாவோயிஸ்டுகளுக்கு எஸ்ஸார் நிறுவனத்தினமிருந்து பணம் வாங்கிக் கொடுத்தார் என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டுக் கதை செய்து வதகைகப்பட்டார். ஆடகொணர்வு மனு மல்லம் அவர் விடுவிக்கப்பட்ட போதிலும், அவரது வயதான தந்தை உள்ளிட்ட அவரது குடும்பத்தசை் சரேந்த ஐந்து பரே் கதை செய்யப்பட்டனர். அவரது வீடு எரிக்கப்பட்டது அவரது கிராமத்தினர் வதகைகப்பட்டனர். அவரது உறவினரும் பள்ளி ஆசிரியையுமான சோனி சோரி என்பவர் மாவோயிஸ்டுகளுக்கூப் பணப்பட்டுவாடா செய்யும் தொடர்பாளராக இருந்தார் என்று பொய்க்குற்றம் சாட்டப்பட்டு பாலியல் வன்கொடுமைகை்கு ஆளாகக்கப்பட்டுள்ளார்.

கருத்துரிமைக்குக் கல்லறை !

Written by தமிழரங்கம்
Friday, 27 January 2012 20:51 -

மனித உரிமை ஜனநாயக உரிமை பற்றியோ, காஷ்மீர் பற்றியோ, கார்ப்பரேட் கொள்ளையைப் பற்றியோ, மாவோயிஸ்டுகள் கார்பாகவோ யாரும் எதுவும் பேசக்கூடாது என்பதுதான் இப்போது இந்திய அரசின் அறிவிக்கப்படாத கொள்கை. மறுகாலனியாதிக்கத்தின் கீழ் மனித உரிமை ஜனநாயக உரிமைகள் எத்தகையதாக இருக்கும் என்பதற்கு, தொடரும் கைதுகளும் பொய் வழக்குகளும் மோதல் கொலைகளும் அடக்குமுறைகளுமே இரத்த சாட்சியமாக உள்ளன.

. குமார்

4 / 4